RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2525

# காரைக்காலம்மையார் பாடலில் சித்தாந்தக் கருத்துக்கள்

ரா. விஷ்ணு பிரியா [அ, *]

[அ] தமிழ்த்துறை, அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி, சிவகாசி, இந்தியா

# Ideological Concepts in Karaikalammaiyar's Song

**R. Vishnu Priya** [a, *]

[a] Department of Tamil, Ayya Nadar Janaki Ammal college (Autonomous), Sivakasi, India

* Corresponding Author: vishnupriya1605@gmail.com

Received: 19-01-2025
Revised: 20-03-2025
Accepted: 26-03-2025
Published: 08-04-2025

Check for updates

**ABSTRACT**

Saivam is related to Shiva. The Witings of karaikal ammaiyar are based on the saiva tradition about the aforementioned emperuman. The article is full of fundamental treasures of ideological ideas in the songs of karaiaikal ammaiyar. Siddhanta indicates the position of Lord Shiva and the path to attain the feet of Shiva. It studies pathi, pasu, pasam, sariya, kriya, Yoga. The research article is a study of the development of Siddhanta and the ideas of Saiva devotees.

**Keywords:** Karaikal Ammaiyar, Ideological Concepts, Saivam, Saiva Devotees

## முன்னுரை

சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம் சைவம் ஆகும். சைவ சமயத்தின் அடிப்படைக் கொள்கைகளை விளக்குவதுடன் நுண்பொருள்களையும் உணர்த்துவது சைவ சித்தாந்தம் ஆகும். "சைவசித்தாந்தம் தமிழ்நாட்டிற்குரிய சமயம் என்றும், திராவிட மக்கள் மிகவும் போற்றுகின்ற சமயம் என்றும் டாக்டர் ஜி.யு. போப் கூறியுள்ளதை வாழ்வியற் களஞ்சியம் எடுத்துரைக்கிறது. சைவத் திருமுறைகள் பன்னிரண்டாகும். திருமுறைகள் பாடிய ஆசிரியர்கள் இருபத்தேழு பேர் ஆவர். அவர்களுள் பெண்பாற் புலவர் காரைக்காலம்மையார் ஒருவரே ஆவார். . சைவத் திருமுறையில் இப்பிரபந்தங்கள் 'பதினோராந் திருமுறையாக' அமைந்துள்ளது. மேலும் சைவ சித்தாந்தக் கருத்துக்களுக்கு அடிப்படைக் கருவூலங்கள் திருமுறைகளே ஆகும். எனவே காரைக்காலம்மையாரின் பாடல்கள் மூலம் அறியவரும் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் பற்றி ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## சைவ சித்தாந்தம்

கி.மு.வின் முடிவுக் காலமும், கி.பி.யின் தொடக்கக் காலமும் சங்க காலம் ஆகும். எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு ஆகிய சங்க காலப் படைப்புகளில் சிவக்கொள்கை, வினைக்கொள்கை முதலிய சித்தாந்தச் செய்திகள் பரவலாகக் காணப் படுகின்றன. இராஜசிம்ம பல்லவனது கயிலாசநாதர் கோவில் கல்வெட்டில் 'சைவ சித்தாந்தம்' என்ற குறிப்பு காணப்படுகிறது. காரைக்காலம்மையாரின் காலம் முதல் தெய்வச் சேக்கிழாரின் காலமாகிய கி.பி. 12-ஆம் நூற்றாண்டு வரை திருமுறைக்காலம் ஆகும். இதனைச் சைவசித்தாந்த வளர்ச்சியில்

பொற்காலம் எனலாம். ஏனெனில் சைவ சித்தாந்தங்கள் எல்லா மக்களுக்கும் தெளிவாய் விளங்குவதற்கு ஏற்ற வகையில் திருமுறைகளாகத் தோன்றிப் பரவின என்பதை அறியமுடிகிறது. வாழ்வில் நல்நெறி அறமாகிய முக்திபேறு அடைவதற்கு உரிய நெறியாக சைவசித்தாந்தம் விளங்குகிறது.

## இறைநிலை இயல்பு (பதி)

சைவ சித்தாந்த முப்பொருட்களுள் பதியாகிய இறைவன் ஒருவனே ஆவான். அவன் எங்கும் நீக்கமற எல்லாவற்றிலும் கலந்துள்ளான். ஒப்புயர்வற்ற மேலான பரம்பொருளாகவும் இறைவன் விளங்குகிறான். இதனை,

“ஒன்றே நினைந்திருந்தேன் ஒன்றே

துணிந்தொழிந்தேன்

ஒன்றேயென் உள்ளத்தின் உள்ளடைத்தேன்

ஒன்றேகாண்” (அ.தி.பா.எ. 11)

என்ற பாடலடிகளின் வாயிலாக இறைவன் ஒருவனையே நினைத்து வாழ்வேன் என உறுதிப்பாட்டுடன் அம்மையார் கூறுவதை அறிய முடிகிறது.

## பதியே தலைமையானவன்

இவ்வுலகில் எவ்வுயிர்க்கும் தலைமைப் பொருளாக, தலைவனாக விளங்குபவன் பதியாகிய எம்பிரான் ஆவார். இதனை,

“அதுவே பிரான் ஆமாறு ஆட்கொள்ளுமாறும்

அதுவே யினியறிந்தோ மானால் - அதுவே

பனிக் கணங்கு கண்ணியார் ஒண்ணுதலின் மேலோர்” (அ.தி.பா.எ. 12)

என்னும் பாடலடிகள் வாயிலாக தலைமை நிலையில் உயிர்களை ஆட்கொள்ளும் நிலையைக் கொண்டவர், பனிக்கு வாடிடும் கொன்றை மாலை அணிந்த எம்பிரான் தலைமையானவன் என்பதை அம்மையார் உணர்த்துகின்றார். மேலும் தலைவன் என்ற சொல் பிரான், ஈசன் ஆகியவற்றைக் குறிக்கும்.

“மறவாது வாழ்வாரை மண்ணுலகத்து என்றும்

பிறவாமைக் காக்கும் பிரான்” (திரு.இர.மா.பா.எ. 2)

என்னும் பாடலில் பதியைக் குறிக்கும் பிரான் என்ற சொல்லைக் கையாண்டுள்ளதை அறியமுடிகிறது.

## பதி இயற்கை உணர்வினன்

இறைவன் சோதி வடிவாக எல்லா இடங்களிலும் நீக்கமற விளங்குகிறான். உலகம் முழுவதிலும் நாம் காணும் காட்சிகளில் அவன் இருக்கிறான்.“இயற்கை உணர்வே ‘அநாதி போதம்’ எனப்படும்”1 என்று சைவ சமயக் களஞ்சியம் கூறுகிறது.

“குன்று எலாம் குயில் கூவ . . .

தென்றலார் அடிவருடச் செழுங்கரும்பு

கண் ஊரும் திருவையாறே”

என்று சம்பந்தர் இயற்கை வழியாக பதியாகிய இறைவனைக் கூறுவதை இப்பாடல் மூலம் அறிய முடிகிறது.மேலும் அம்மையார், சிறப்புப் பொருந்திய கொன்றை மலர் நன்கு மலர விண்ணில் நீரோடி நிரம்பிய பெரிய ஆறான கங்கைவெள்ளம் பெருக, அரவினை அணிந்த இறைவனின் வடிவம் கார்கால வடிவமாகும்.

"சீரார்ந்த கொன்றை மலர்தழைப்பச் சேணுலாவி

நீரார்ந்த பேரியாறு நீத்தமாய்ப் - பேரார்ந்த

நாண் பாம்பு கொண்ட சைத்த நம்மீசன்

பொன்முடி தான் காண்பார்க்குச் செவ்வேயார் கார்" (அ.தி.பா.எ. 53)

என்ற பாடலடிகளில் இயற்கை வழியாக இறைவனைக் காண்பதை அறிய முடிகிறது.

"ஈசன் அவன் அல்லாது இல்லையென நினைந்து" (திரு.இர.மா.பா.எ. 2)

என்று அம்மையார் ஈசனை தலைமையாய் முழுமுதற் கடவுளாய் விளங்குவதாக இப்பாடலடியில் கூறியுள்ளார்.

## உயிர்நிலை இயல்புகள் (பசு)

பசு என்பதற்குப் "பாசத்தால் கட்டப்பட்டது இயற்கையிலே ஆணவத்தால் கட்டுண்டு கிடக்கின்ற உயிரை குறிக்கும்"2 என்று விளக்கம் தருவர் அறிஞர். தானே அறியும் பொருள் உயிர்நிலை என்றும், இறைவன் திருமேனி, இயற்கை இதில் பசு ஞானத்தை அறிய முடியும் என்று 'சைவசித்தாந்தத் திறவு' கூறுகிறது.

"பிறையும் புனலும் அனலரவுஞ் சூடும்

இறைவர் எமக்கிரங் காரேனுங் - கரைமிடற்ற

எந்தையார்க்கு ஆட்பட்டோம் என்றென்று இருக்குமே" (அ.தி.பா.எ. 23)

என்ற பாடல் வாயிலாக இறைவனின் திருமேனியைக் கூறி அவர் அன்பிற்கு ஆளானோம் என்று அம்மையார் பசுஞானத்தைக் கூறியுள்ளதை அறிய முடிகிறது.

## உயிர்கள் இறைவனுக்கு அடிமை

உயிர்கள் இறைவனுக்கு அடிமையாவதும் பசுஞானம் ஆகும். மனத்திற்கு இனியானாயும் நல்ல மங்கல குணங்களையுடையானும், கங்கையின் மணவாளனும் செம்மையான திருமேனி கொண்ட பெரியவனும் எம்பெருமான் ஆவார். நான் வேறு எவரையும் அணுகாமல் அவனுக்கே அடிமை கொண்டவன் என்பதை,

"தனக்கே அடியனாய்த் தன்னடைந்து வாழும்

எனக்கே அருளாவாறு என்கொல் - மனக்கினிய

சீராளன் கங்கை மணவாளன் செம்மேனி" (அ.தி.பா.எ. 44)

என்னும் பாடலடிகள் வாயிலாக அம்மையார் இறைவனுக்கு அடிமை பூண்டிருத்தலை அறிய முடிகிறது.

## உயிர் வகைகள்

உயிர்கள் விஞ்ஞானகலர், பிரளயாகலர். சகலர் என்று மூன்று வகைப்படும். விஞ்ஞானகலர் என்பது அருளைத் தருபவர் இறைவன்.

"ஆவாவென்று ஆழாமைக் காப்பானை எப்பொழுதும்

ஓவாது நெஞ்சே உரை" (திரு.இர.மா.பா.எ. 6)

என்ற பாடலடிகள் வாயிலாக அரவினை உடைய இறைவன், நாம் இறக்கும்போது துன்பத்தில் ஆழ்த்தாமல் அருளுவான் என்பதை இதன்வழி அறிய முடிகிறது. பிரளயாகலர் மானும் மழுவும் ஏந்திய திருக்கரங்களும், தடந்தோளும் தோன்றி அருளுவான். சகலர் குரு வடிவமாக அருளுவான்.

"புனற்கங்கை ஏற்றானோர் பொன்வரையே போல்வன்

அனற்கங்கை ஏற்றான் அருள்" (அ.தி.பா.எ. 8)

என்று பிரளயாகலர் நிலையில் அருள்வதையும்,

"காண்பார்க்குங் காணலாந் தன்மையனே

கைதொழுது காண்பார்க்குங் காணலாம் காதலால் காண்பார்க்குச்" (அ.தி.பா.எ. 17)

என்று குரு வடிவில் நின்று அருள்வதையும் மேற்கண்ட பாடலடிகளின் வாயிலாக அறிய முடிகிறது.

## உயிரறிவுக்குப் பதி செய்யும் உதவிகள்

உயிர் அறிவுப் பொருள். கண்ணானது ஒரு பொருளைக் காணும்போது தானே காணாது; உயிரால் காட்டப்பெறும். அவ்வாறு உயிரும் இறைவன் உதவியின்றி ஒன்றையும் அறிய முடியாது. அவ்வாறு இறைவனால் அறிகின்ற உயிர் தன்னையும் இறைவனையும் அறியும்.

"அறிவானுந் தானே அறிவிப்பான் தானே

அறிவாய் அறிகின்றான் தானே - அறிகின்ற" (அ.தி.பா.எ. 20)

என்ற பாடலடிகளின் வாயிலாக பதியாகிய இறைவன் அறிவிப்பானாக, அறிவாக, அறிகின்றவனாக உயிரறிவுக்கு உதவி செய்தலை அம்மையார் உணர்த்துகின்றார்.

## பாச இயல்பு (தளை)

உயிர்களைப் பற்றி நிற்பது பாசம். முப்பொருள்களில் சடப்பொருளாகக் கருதப்படுவது பாசமே. இதுவும் இறை, உயிர் போன்று அநாதியே ஆகும்.

"தளை என்பது குற்றவாளிகளைச் செயற்படாமல் அடக்கி வைப்பதற்கு அவர்களது கையிலும், காலிலும் பூட்டப்படும் விலங்கு. இது வடமொழியில் 'நிகளம்' எனப்படுகிறது"[3] என்று பாசத்திற்கு விளக்கம் தருகிறார் கங்காதரன்.

மேலும் ஆணவம், கன்மம், மாயை என்பவை பாசத்தின் மும்மலங்களாகும்.

"மும்மலச்சேறான முழுக்கும்பி பாகமெனும்

இம் மலகா யத்துள் இகழ்ச்சிவைப்ப

தெந்நாளே"[4]

என்ற பாடலடிகள் மூலமாக ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களில் உண்டான இவ்வுடலை வெறுப்பது எந்நாள்? எனப் பொருள் பெறுவதோடு 'மும்மலம்' என்னும் சித்தாந்தக் கொள்கையினை அறிய முடிகிறது.

## ஆணவம்

ஆணவம் மும்மலங்களில் மூலமலமாகும். அறிவுடைய பொருளாகிய உயிரை அறியாமையுடையதாகச் செய்வதே ஆணவத்தின் இயல்பாகும். உயிர் செயற்கையாகவே அறியாமை உடையதாக ஆக்கப்படுகிறது. மேலும் குருடன் கண்ணுக்கு இருள் போன்று உயிரின் அறிவுக்கு ஒன்றும் தெரியாதவாறு ஆணவம் மட்டும் தனித்து நின்று மறைக்கும் முறை 'ஆவாரக சக்தி' என்று பெயர் பெறும்.

"அந்தனுக் கெங்கும் இருளானவாறு"[5]

என்னும் பாடலடி ஆணவத்தின் ஆவாரசக்தியைக் கூறுகின்றது. உயிர்கள் அடைகின்ற எல்லா வகையான துன்பத்திற்கு அடிப்படைக் காரணம் ஆணவம். ஆணவத்தினால் முன்னைய வினையானது தூண்ட அது காரணமாய் வெதும்பி இவ்வுடம்பினுள் வந்து சேரும். இதனை,

"கிளர்ந்துந்து வெந்துயர் வந்திடும்

போது அஞ்சி நெஞ்சம் என்பாய்த்

தளர்ந்திங்கு இருத்தல் தவிர்திகண்

டாய் தளராதுவந்தி" (திரு.இர.மா.பா.எ. 1)

என்ற பாடல் மூலம் பிறவித்துன்பத்தை உயிர்கள் அனுபவிப்பதாக அம்மையார் உணர்த்துகின்றார்.

## கன்மம்

கன்மத்தை வினை என்றும், செயல் என்றும் கூறுவர். கன்ம மலமானது உயிர்கள் பொருந்துகின்ற உடம்புகளுக்குக் காரணம் ஆகும். கன்மம் சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் என மூன்று விதமாகும். உயிர்கள் அறிந்தோ, அறியாமலோ வினைகளைச் செய்கின்றன. இவ்வினைகள் பிறவிக்கு வித்தாக அமைகின்றன. முற்பிறவியில் செய்த பாவம், புண்ணியம் சஞ்சித வினையாகும். இவ்வினை பழவினையாகும் என்பதை,

"வினைநகர் ஏதுமின்றித்

தழற்கொண்ட சோதிச் செம்மேனிஎம்

மானைக்கம் மாமலர்தூய்த்

தொழக்கண்டு நிற்கிற்கு மோதுன்னி

நம்அடுந் தொல்வினையே" (திரு.இர.மா.பா.எ. 11)

என்னும் பாடலடிகள் வழியாக தொல்வினையாகிய சஞ்சிதம் பற்றி அம்மையார் கூறியுள்ளதை அறிய முடிகிறது.மேலும் துன்பத்தைத் தருகின்ற தீவினைகள் வந்து சூழ்வதற்கு முன் சிவபெருமானை நினைந்து வணங்கினால் அவ்வினை நீங்கும்.

"தொல்லை வினை வந்து சூழாமுன் தாழமே

ஒல்லை வணங்கி உமையென்னும் - மெல்லியல்ஓர்" (திரு.இர.மா.பா.எ. 12)

என்ற பாடலடிகள் வழியாக தொல்வினை பற்றியும், வினை நீங்குவது பற்றியும் அம்மையார் உணர்த்துகின்றார்.

## மாயை

மாயை ஒரு காரணப் பொருள். எல்லா வினைக்கும் எதிர்வினை உண்டென்பது விதி. அவ்விதியின் காரணமாய் வினைநீக்கம் வேண்டி, உயிர் இயங்க வேண்டியதாக உள்ளது. அவை முக்தி பேறாகும். மாயை என்ற பிறவி வினையிலிருந்து நீங்க சாதனமாக விளங்குவது வீடுபேறு. அறிவுத்திறத்தினால் உண்மையை அறிந்து சிவபெருமானை வழிபட்டால் மீண்டும் எலும்புடன் கூடிய உடலுடன் உயிர் பெற்று இவ்வுலகில் பிறக்கமாட்டார்கள். இதனை,

"என்பு ஆக்கை யால்இகழாது ஏத்துவரேல் இவ்வுலகில்

என்பு ஆக்கை யாய்ப்பிறவார் ஈண்டு" (அ.தி.பா.எ. 37)

என்று அம்மையார் இப்பாடலடிகளின் வாயிலாக உணர்த்துகின்றார். மேலும் உயிர்களின் இயல்பு துன்பத்திலிருந்து விடுபட்டு இன்பத்தை விரும்புவதாகும். துன்ப வெள்ளமான கடலில் வீழாமல் மேலான இன்பத்தை அடைய வேண்டுபவர் சிவனின் பாதங்களைப் பணிந்து வணங்கி அதில் உறுதியாக நில்லுங்கள் என்று அம்மையார் கூறுகிறார்.

"கீழா யினதுன்ப வெள்ளக்

கடல்தள்ளி உள்ளுறப் போய்

வீழா திருந்தின்பம் வேண்டும்என்

பீர்வர வார்புரங்கள்" (திரு.இர.மா.பா.எ. 9)

இப்பாடலடிகளின் வழியாக வீடுபேற்றினை இன்பம் என்ற சொல்லால் குறிப்பதை அறிய முடிகிறது.

## முடிவுரை

சைவ நூல்களின் முடிந்த முடிபைக் கூறும் நூல் சைவ சித்தாந்தம் என்பர். அதன் முப்பொருள் உண்மையான பதி, பசு, பாசம் இவற்றின் இயல்புகள் அம்மையார் பாடல்களில் பொருந்தி வந்துள்ளமை பற்றியும், சிவனடி சேர்வதற்குரிய நெறி சைவ சித்தாந்தத்தின் முப்பொருள் உண்மையே என்பதையும் இவ்ஆய்வு கட்டுரை வழியாக ஆய்ந்து அறிய முடிகிறது. ஆணவம், கன்மம், மாயை குறித்தும், சைவ சித்தாந்தத்தின் தோற்றமானது இலக்கண நூலாகிய தொல்காப்பியக் கற்பியலில் அறிமுகம் உள்ளது என்பதையும் இவ் இயல் ஆய்ந்து இயம்புகின்றது. பதி, பசு, பாசம் என்ற மும்மலத்தின் இயல்புகள், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற சைவ நெறிகள் போன்றவற்றை ஆய்ந்து அறிய முடிகிறது.

## References

இராமநாதன், ப. தாயுமானவடிகள் திருப்பாடல்கள், தமிழ் வெர்ச்சுவல்.

கங்காதரன், ச. (1992) சைவ சித்தாந்த அடிப்படைக் கொள்கைகளும் வரலாறும், கோவிலூர் ஆண்டவர் நூலகம், கோவிலூர்.

செல்வகணபதி, இரா. (2013) தெய்வச்சேக்கிழார், தொகுதி8, மனிதவள மேம்பாட்டு அறக்கட்டளை, சென்னை,

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2025. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License